இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 25-01-2025

# திவால் ஆன பழனிசாமி

**திவால் ஆன பழனிசாமி, 'தமிழ்நாடு அரசு திவால் ஆகப் போகிறது' என்று புலம்பிக் கொண்டிருக்கிறார். தண்ணீரில் மூழ்கிய நரி ஒன்று, 'உலகம் அழியப் போகிறது' என்று கத்திக் கொண்டே போனதாம். அதைப் போல இருக்கிறது பழனிசாமியின் பேச்சுகள்.**

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2011 முதல் 2021 வரைக்கும் தரை மட்டத்துக்கு இறக்கியது அ.தி.மு.க. ஆட்சி தானே? 2021 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒரு வெள்ளை அறிக்கையை அரசு தாக்கல் செய்தது. முந்தைய அ.தி.மு.க. ஆட்சி தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை எந்தெந்த வகையில் எல்லாம் சீரழித்தது என்பது அதில் உள்ளது.

அதில் இருந்த மிகமுக்கியமான கருத்துகள் என்ன என்றால்...

- 2011-12 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதார நிலைமை உச்சநிலையில் இருந்தது. அது கடந்த (2012-21) பத்தாண்டு காலத்தில் மந்த நிலைமையை அடைந்துள்ளது. அதிலும் குறிப்பாக 2013 -14 ஆண்டில் இருந்து தமிழ்நாடு அரசின் நிதி நிலைமை மிக மோசமான நிலையை அடைந்து வருகிறது. இப்படி நெருக்கடியில் இருந்த நிலையை கொரோனா என்ற பெருந்தொற்றுப் பரவல் கூடுதலாகப் பாதித்துவிட்டது.
- 2006-13 காலக்கட்டத்தில் ஏழு ஆண்டுகளில் 5 ஆண்டுகள் தமிழ்நாடு அரசு உபரி வருவாயை அடைந்திருந்தது. 2013 முதல் பற்றாக்குறை தொடர்ந்து வருகிறது.
- 2017-19 காலக்கட்டத்தில் இந்தியாவிலேயே அதிகளவு வருவாய் பற்றாக்குறை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு ஆக்கப்பட்டு விட்டது.
- 2016-21 அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிதிப் பற்றாக்குறையில் வருவாய் பற்றாக்குறை விகிதம் என்பது 52.48 சதவிகிதம் ஆகும். இது முந்தைய ஆட்சியில் 2011 ஆம் ஆண்டில் 14.95 சதவிகிதமாக இருந்தது.
- அ.தி.மு.க. ஆட்சியின் உண்மையான செலவுகள் கட்டுப்படுத்தப்படவில்லை. பற்றாக்குறைகள் மறைக்கப்பட்டுள்ளது.
- ஒட்டுமொத்தமாக இன்றைய கடன் என்பது 5,70,189 கோடி ரூபாய் ஆக இருக்கிறது. 2010 இல் 16.68 சதவிகிதமாக இருந்த கடனை 2011 இல் - தி.மு.க. ஆட்சியில் - 15.36 சதவிகிதமாக குறைத்தோம். ஆனால் இன்று அது 25 சதவிகிதம் ஆகிவிட்டது. அ.தி.மு.க. ஆட்சியின் தொடக்கம் முதலே கடன் வாங்குதல் அதிகம் ஆகிவிட்டது.
- இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் தற்போது அதிகளவு கடன் வாங்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. இந்த அடிப்படையில் பார்த்தால் தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் 2,63,976 கோடி ரூபாய் பொதுக்கடன் சுமத்தப்படுகிறது.

- ஒட்டுமொத்தமாகச் சொல்வதாக இருந்தால் தமிழ்நாட்டின் நிதிநிலைமை, நிலையற்ற தன்மையில் இருக்கிறது என்று அந்த அறிக்கை கூறியது. இத்தகைய நிலைமையில்தான் பழனிசாமி தமிழ்நாட்டின் ஆட்சியை ஒப்படைத்துச் சென்றார்.

இதில் இருந்து மீட்சியை உருவாக்கியதுதான் தி.மு.க. ஆட்சியின் சாதனையாகும்.

**இன்றைக்கு தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேறிய மாநிலமாக மாறி வருகிறது. தொழில்கள் பெருகி இருக்கிறது. தொழிற்சாலைகள் அதிகமாகி இருக்கிறது. புதிய வேலை வாய்ப்புகள் அதிகம் ஆகி இருக்கின்றன. புதிய புதிய திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. அனைத்துக்கும் தாராளமாக நிதி ஒதுக்கப்படுகிறது. அறிவிக்கப்படும் திட்டங்களின் எண்ணிக்கை அதிகம். அதற்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதிகள் அதிகம். அதனை பட்டியலிட்டுப் பார்க்கட்டும் பழனிசாமி. இத்தனைக்கும் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனைக்கு மத்தியில் தான் இத்தனை திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.**

தமிழ்நாட்டின் நிதி வளத்தை மொத்தமாகச் சுரண்டிக் கொழுக்கிறது ஒன்றிய அரசு. ஜி.எஸ்.டி. வரி விதிப்பானது மாநில அரசின் பங்கை தட்டிப் பறிக்கும் காரியம் ஆகும். ஜி.எஸ்.டி. - வரி விதிப்பு என்பதே மாநில அரசின் நிதிமூச்சுக்காற்றை நிறுத்தும் செயல் தான். இதனையும் தாக்குப் பிடித்து தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. ஜி.எஸ்.டி. நிதி பகிர்வில் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு 40 விழுக்காடு நிதி தரும் ஒன்றிய அரசானது தமிழ்நாட்டுக்கு 15 விழுக்காடு தான் தருகிறது.

இது வரை நடந்த இரண்டு இயற்கைப் பேரிடர்களுக்கு ரூ.37 ஆயிரம் கோடி நிதி கேட்டோம். ஆனால் ரூ.776 கோடியை மட்டும் - வழக்கமாகத் தரும் நிதியை மட்டும் - கொடுத்துள்ளது ஒன்றிய அரசு. பள்ளிக் கல்வித் திட்டத்துக்காகத் தர வேண்டிய ரூ.2000 கோடியை ஒன்றிய அரசு தரவில்லை. பிரதமரின் வீடு கட்டும் திட்டத்துக்கு மாநில அரசு தான் 60 விழுக்காடு நிதியைத் தருகிறது. மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகளுக்கான தொகையை தமிழ்நாடு அரசு தான் செய்து வருகிறது. ஆனால் ரயில்வே துறையை அவர்கள் வைத்துள்ளார்கள்.

கடந்த ஆண்டு ஒன்றிய அரசு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற பெயரே இல்லை. ஆந்திராவின் பெயர் ஐந்து இடத்தில் இருந்தது. பீகாரின் பெயர் ஐந்து இடத்தில் இருந்தது. மேற்கு வங்கம் ஒரு இடத்தில் வந்தது. நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற பெயரே இல்லை. இத்தகைய சூழலில்தான் மாநில அரசை நடத்தி வருகிறோம்.

ஆந்திர தலைநகர் அமராவதி மேம்பாட்டுக்கு ரூ.15 ஆயிரம் கோடி. பீகாரில் நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு ரூ.26 ஆயிரம் கோடி, பீகார் வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ரூ.11,500 கோடி. தமிழ்நாட்டுக்கு ஏதுமில்லை. முன்பாவது ஒரு திருக்குறள் இருக்கும். அதுவும் இல்லை. ஒண்ணே முக்கால் அடி திருக்குறளைக் கூட 'துண்டித்து'விட்டார்கள். இத்தகைய சூழலில்தான் மாநில அரசை நடத்தி வருகிறோம்.

**இதையெல்லாம் பேசுவதற்கு பழனிசாமிக்கு முதுகெலும்பு இல்லை. 'திவால் ஆகிறது அரசு' என்று பேசி இருக்கிறார். நின்ற தேர்தலில் எல்லாம் தோற்று - சொந்தக் கட்சிக்காரர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டு - அவரது தலைமையை நிராகரித்து மூன்று அ.தி.மு.க. செயல்படும் இந்தக் காலத்தில் 'திவாலை' பற்றி எல்லாம் பேசுவதற்கு அவருக்குத் தகுதி இருக்கிறதா?**

••



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.1.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தொல்லியல் அகழாய்வு மூலம் கண்டெடுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருட்களை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர் த.உதயச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் பி. சந்தர மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# இந்தியாவின் வரலாறு தமிழ் நிலப்பரப்பிலிருந்துதான் எழுதப்படும்!

## முதல்வர் பிரகடனம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

காலக்கணக்கீடுகள் இரும்பு அறிமுகமான காலத்தை கி.மு. 4000ஆம் ஆண்டின் முதற்பகுதிக்குக் கொண்டு சென்றிருக்கிறது.

### உலகின் தலைசிறந்த ஆய்வகங்களின் ஒரே மாதிரியான பகுப்பாய்வு முடிவுகள்!

தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் 5300 ஆண்டுகளுக்கு முன்பு இரும்பு அறிமுகம் ஆகியிருக்கிறது என்று உறுதியாக சொல்லலாம். இதை ஆய்வு முடிவுகளாகவே நான் அறிவிக்கிறேன். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் உலகத்தின் தலைசிறந்த ஆய்வகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

- புனே நகரில் இருக்கும் பீர்பால் சகானி தொல் அறிவியல் நிறுவனம்,
- அகமதாபாத் நகரில் இருக்கும் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் ஆகிய தேசிய அளவில் புகழ்பெற்ற ஆய்வு நிறுவனங்களுக்கும் பன்னாட்டு அளவில் உயரிய நிறுவனமான அமெரிக்க நாட்டின் ஃப்ளோரிடா மாநிலத்தில் இருக்கும் பீட்டா ஆய்வகத்துக்கும் – மாதிரிகள், பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. தேசிய நிறுவனங்களில் OSL பகுப்பாய்வுக்கும், பீட்டா ஆய்வகத்தில் கதிரியக்க காலப் பகுப்பாய்வுக்கும் ஒரே தாழியிலிருந்து மாதிரிகளை அனுப்பி வைத்தோம். இப்படியான மூன்று நிறுவனங்களிடம் இருந்தும் ஒரே மாதிரியான பகுப்பாய்வு முடிவுகள் பெறப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பல்வேறு ஆய்வு நிறுவனங்களுக்கு மாதிரிகளை அனுப்பி பெறப்பட்ட முடிவுகளை, கூர்ந்து ஒப்பாய்வு செய்ததில் ஒரே மாதிரியான முடிவுகள் கிடைக்கிறது. இப்போது கிடைத்திருக்கும் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் மற்றும் OSL பகுப்பாய்வு காலக்கணக்கீடுகள் அடிப்படையில் கி.மு. 3345லேயே, தென்னிந்தியாவில் இரும்பு அறிமுகமாகிவிட்டது என்று தெரிய வருகிறது. அதற்கான ஆய்வு முடிவுகள் இதோ!

### ஆய்வாளர்களின் கருத்துகளையும் தொகுத்து வெளியிடப்பட்டுள்ள நூல்!

இந்த பகுப்பாய்வு முடிவுகள், வெளிநாடுகள் மற்றும் இந்தியாவில் இருக்கும் தொல்லியல் அறிஞர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் எல்லோரும் இரும்பின் தோற்றத்தையும் பண்டைய தொழில்நுட்பத்தைப் பற்றியும் ஆய்வு செய்துவரும் அறிஞர் பெருமக்கள். அந்த அறிஞர் பெருமக்கள் எல்லோரும் இந்த அவையில் கூடியிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் ஒருசேர தமிழ்நாடு அரசையும், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் ஆய்வு முன்னெடுப்புகளையும் வெகுவாக பாராட்டியிருக்கிறார்கள்.

இரும்பின் காலம் குறித்த முடிவுகளுக்கு ஆதரவாகவும் – கண்டுபிடிப்புகளை பாராட்டியும் இருக்கிறார்கள். இது போன்று பகுப்பாய்வு முடிவுகள் ஆய்வாளர்களுக்கு புதிய உத்வேகத்தை அளித்திருக்கிறது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத் தகைசால் பேராசிரியர் 'பத்மஸ்ரீ திலீப் குமார் சக்கரவர்த்தி' அவர்களும், ஒன்றிய அரசின் தொல்லியல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் 'முனைவர் ராகேஷ் திவாரி' அவர்கள் உட்பட எல்லா அறிஞர் பெருமக்களும் பகுப்பாய்வு முடிவுகளைப் பாராட்டி தங்களின் கருத்துகளை சொல்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும் தொகுத்து தான் 'இரும்பின் தொன்மை' என்ற நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. தேசிய அளவில் தொல்லியலில் வல்லுநராக இருக்கும் ஆய்வாளர்களிடம் பகுப்பாய்வு முடிவுகள் பற்றி கருத்து பெறப்பட்டு, அந்த அறிஞர்களின் கருத்துகளும் இந்த நூலில் இடம்பெற்றிருக்கிறது.

அகழாய்வு செய்யப்பட்ட இடங்களில் இருக்கும் இரும்புப் பொருட்களின் உலோகவியல் பகுப்பாய்வும், இரும்புத்தாது இருக்கும் தொல்லியல் தளங்களில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள அகழாய்வுகளும் இந்தக் கண்டுபிடிப்புகளுக்கு மேலும் வலுசேர்க்கும்; சான்றுகளை வழங்கி தெளிவுபெற வைக்கும். அப்படியான வலுவான சான்றுகளுக்காக நம்பிக்கையோடு நாம் காத்திருப்போம்.

### உலக மானுட இனத்துக்கு தமிழ்நிலம் வழங்கும் மாபெரும் கொடை!

இருந்தாலும், அண்மைக்கால அகழாய்வு முடிவுகள் வாயிலாக தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய அளவில் மட்டுமல்ல, உலகளவில் இரும்புத் தாதுவிலிருந்து, இரும்பை பிரித்து எடுக்கும் தொழில்நுட்பம் தமிழ் நிலப்பரப்பில் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது என்று பெருமிதத்தோடு கூறுவோம்.

**அதாவது, 5300 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நிலப்பரப்பில் இரும்பு அறிமுகப்படுத்தப்பட்டு இருப்பதை அறிவியல் அடிப்படையில் நிறுவியிருக்கிறோம் என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் உலகுக்கு நான் அறிவிக்கிறேன். இது தமிழுக்கும், தமிழினத்துக்கும், தமிழ்நாட்டுக்கும், தமிழ் நிலத்துக்கும் பெருமை! உலக மானுட இனத்துக்கு தமிழ் நிலம் வழங்கும் மாபெரும் கொடை என்றே இதை நாம் கம்பீரமாக சொல்லலாம்.**

தமிழ்த்தாயின் தலைமகனான பேரறிஞர் அண்ணாவின் பெயரில் அமைந்திருக்கும் இந்த அறிவுச் சுரங்கத்தில் நடைபெறும் இந்த விழாவின் வழியாக பெருமையுடன் சொல்கிறேன். "பேரறிஞர் அண்ணா அவர்களே! இதோ நமது உயர்வான தமிழ்நாட்டைப் பாருங்கள்...!" "அன்று கிண்டல் கேலி பேசியவர்கள் எல்லாம் நம்மை கற்பனாவாதிகள் என்று குற்றம் சொன்னவர்கள் எல்லாம் வாயடைத்து நிற்கிறார்கள் பாருங்கள்" "இலக்கியத்தில் இருப்பதெல்லாம் வரலாறு ஆகாது" என்று சிறுமைப்படுத்தி பேசியவர்கள் எல்லாம் அறிவியல்பூர்வமாக நம்முடைய வரலாற்றை நிரூபணம் செய்வதைக் கண்டு திகைத்து நிற்கிறார்கள் பாருங்கள்!

### பல்வேறு திருப்புமுனைகளை உருவாக்கிவரும் தொல்லியல் துறை ஆய்வுகள்!

இந்தியாவின் வரலாறு இனி தமிழ் நிலத்திலிருந்துதான் எழுதப்படவேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறேன். அதை மெய்ப்பிக்கும் ஆய்வுகளை தமிழ்நாடு தொல்லியல் துறை தொடர்ச்சியாக செய்து வருகிறது. இந்த ஆய்வுகள், பல்வேறு திருப்புமுனைகளையும் உருவாக்கி வருகிறது.

- தமிழ்நாட்டில் நகர நாகரிகமும் எழுத்தறிவும் கி.மு. 6ஆம் நூற்றாண்டே தொடங்கிவிட்டது என்று கீழடி அகழாய்வு முடிவுகள் நிறுவியிருக்கிறது.
- பொருநை ஆற்றங்கரையில் 3 ஆயிரத்து 200 ஆண்டுகளுக்கு முன்பு வேளாண் பயிர்த் தொழிலில் நெல் பயிரிடப்பட்டிருக்கிறது என்று சிவகளை அகழாய்வு முடிவு வெளிப்படுத்தி இருக்கிறது.
- இதற்கு முன்பு, தமிழ்நாட்டில் இரும்பின் அறிமுகம் 4 ஆயிரத்து 200 ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததை கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை அகழாய்வு மூலம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் உலகுக்கு அறிவித்திருக்கிறேன்.

இத்தகைய அகழாய்வு முடிவுகள் தமிழ்நாட்டு வரலாற்றுக்கு மட்டுமல்லாமல் இந்தியத் துணைக்கண்ட வரலாற்றுக்கே முக்கிய திருப்புமுனையாக திகழ்ந்து வருகிறது. இதுபோன்ற ஆய்வுகளை தொல்லியல் துறை தொடர்ந்து செய்யவேண்டும் என்று துறையின் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களையும் – துறை ஆணையரையும் கேட்டுக்கொள்கிறேன்.

### என் வாழ்நாளில் கிடைத்திருக்கக்கூடிய பெருமை! பெறுதற்கரிய பெருமை!

தமிழ், தமிழ் நிலம், தமிழ்நாடு குறித்து நாம் இது வரை சொல்லி வந்ததெல்லாம் இலக்கியப் புனைவுகள் அல்ல; அரசியலுக்காகச் சொன்னவை அல்ல; எல்லாம் வரலாற்று ஆதாரங்கள். உலக அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்று மெய்ப்பிக்க வேண்டிய கடமையை நம்முடைய திராவிட மாடல் அரசு எடுத்துக் கொண்டுள்ளது! ஏற்றுக் கொண்டுள்ளது! தமிழனின் பெருமையை தமிழினத்தின் தொன்மையை உலகம் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டதை சொல்லும் வரலாற்றுப் பெருமைமிக்க இந்த விழா, நாம் வாழும் காலத்தில், நான் ஆளும் காலத்தில் நடைபெறுவது என் வாழ்நாளில் கிடைத்திருக்கக்கூடிய பெருமை! பெருமையிலும் பெருமை! பெறுதற்கரிய பெருமை!

இந்தப் பெருமையை நம்முடைய குழந்தைகளிடம் நாம் எடுத்துச் சொல்லவேண்டும். இப்படிப்பட்ட பெருமைமிக்க தமிழ்ச்சமூகம், உலகுக்கே வழிகாட்டும் அறிவார்ந்த சமூகமாக வளரவேண்டும் என்று எதிர்காலத்துக்கான திசையை காட்டவேண்டும்! பழம்பெருமையை பேசுவது என்பது புது சாதனைகள் படைக்க ஊக்கமாக அமைய வேண்டும்! என்பதை மட்டும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 5–இல், நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | 5 | காங்கேயம் | கோகுல் திருமண மண்டபம், தாராபுரம். |
| | | | தாராபுரம் | |
| | மாலை 3.00 மணி | | மடத்துக்குளம் | ராசி திருமண மண்டபம், போடிப்பட்டி, உடுமலைப்பேட்டை. |
| | | | உடுமலைப்பேட்டை | |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 22-01-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி